**DEPOSITION OF WITNESSES**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT,**
**PUDUKKOTTAI**

**C.C. No: 74/2022**

**Deposition of Witnesses for PW2**

| | | |
|---|---|---|
| Name | : | விக்ணேஷ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023, on the day of 14.10.2025

எதிரி ஆஜரில்லை மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.

முதல் விசாரணை

நான் தற்போது கமுதி காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன்.கடந்த 03.06.2020 ம் தேதி கோவிலாங்குளம் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வந்தபோது சார்பு ஆய்வாளர் நாகராஜபிரபுக்கு கிடைத்த தகவலின் படி அவருடன் நான்,சிறப்பு சார்பு ஆய்வாளர் சண்முகவேல் ,இராமசந்திரன் ஆகியவருடன் காவல் நிலையத்தில் இருந்து8.00 மணிக்கு புறப்பட்டு கோவிலாங்குளம் to கமுதி செல்லும் மெயின் ரோட்டில் நெரிஞ்சிப்பட்டி பஸ்ஸடாப்க்கு சென்று வாகனத்தனிக்கை செய்து வந்தோம் அப்போது வடக்கில் இருந்து தெற்கு நோக்கி கோவிலாங்குளம் காவல் நிலைய சரித்திரபதிவேட்டு குற்றவாளியான கடலாடி தாலுகா ஒச்சதேவன் கோட்டை கிராமத்தை சேர்ந்த வேலாயுதம் மகன் சண்முகநாதன் என்பவர் கறுப்பு நிற 150 Pulsar இரு சக்கர வாகனத்தில் வந்தவர் போலீஸ் பார்ட்டிகளாகிய எங்களை கண்டதும் மேற்படி வாகனத்தி திருப்பிகொண்டு தப்பிக் முயற்சிசெய்தபோது அவன் கீழே விழுந்து இடது காலில் காயம் ஏற்பட்டது. அவரை சார்பு ஆய்வாளர் பிடித்தார் பின்னர் அவரிடம் சார்பு ஆய்வாளர் அவரை குறித்து விசாரித்தார் அவரிடம் போதைபொருள் ஏதும் உள்ளதா என்று கேட்டார். அவர் தனது பெயர் சண்முகநாதன் என்று சொன்னார் . அவரிடம் விசாரணை செய்தபோது அவரிடம் நாங்களே சோதனை செய்யலாமா அல்லது பொது நபர் அல்லது நடுவர் முன்புக்கு சோதனையிட வேண்டுமா என்று கேட்டதற்கு எதிரி தாங்களே சோதனை யிடலாம் என்று கூறினார்.

அதன் அடிப்படையில் இருசக்கர வாகனத்தை சோதனை செய்தபோது அதில் நீல நிற பாலீதின் பொட்டல பை இருந்தது அதை பிரித்து பார்த்தபோது அதில் கஞ்சா இருந்தது. மேலும் ஊதா நிற துணி பையில் நாட்டு வெடி குண்டுகள் 5 ,2.5 அடி வாள் ஒன்று இருந்தது. காவலர் இராமசந்திரன் மூலம் அருகில் உள்ள கடையில் தராசு வாங்கி க்கொண்டு கஞ்சா பொருள்களை எடை போட்டு பார்த்ததில் அதில் 1கிலோ 750 கிராம் கஞ்சா இருந்தது. காலை 9.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் மேற்படி எதிரியை விசாரிக்க எந்தவொரு அச்சுறுத்தலும் மற்றும் ஆசை வார்த்தைகள் இன்றி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் சண்முகவேல் கையொப்பம் இட்டோம். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்டும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது ஆகும் அந்த கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு கஞ்சா 1.750 கி.கி , 5 நாட்டு வெடிகுண்டுகள், TN 67 AY 5814 என்ற பதிவு எண் கொண்ட பைக் , 2.5 அடி நீளமுள்ள வாள் ,ஆகியவற்றை எதிரியிடம் இருந்து அத்தாட்சி தயார் செய்து சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார் அந்த அத்தாட்சிக்கு சாட்சியாக நானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் சண்முகவேல் உடன் இருந்து சாட்சி கையொப்பம் செய்தோம் என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சியில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதாகும் அந்த அத்தாட்சி அ.த.சா.ஆ 2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.மேலும் எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட தடய சொத்துகளுடன் காவல் நிலையத்திற்கு காலை 11.00 மணிக்கு வந்து சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய நான் உதவியாக இருந்தேன். இவ்வழக்கு சம்பந்தப்பட்ட எதிரியிடம் கைப்பற்றிய 5 நாட்டு வெடுகுண்டுகளை நீதிமன்ற உத்தரவின் படி Bomb detective disposal sqaurd. சார்பு ஆய்வாளர் முனியசாமி 03.02.2021 ம் தேதி காவல் நிலையம் வந்து காவல் நிலையத்தின் பின்புறமாக 500 மீட்டர் தொலைவில் மேற்படி 5 நாட்டு வெடிகுண்டுகளை செயழிலக்க செய்தார் . அப்போது நான் கோவிலாங்குளம் சார்பு ஆய்வாளர் நாகராஜ பிரபு, சிறப்பு சார்பு ஆய்வாளர் சண்முகவேல் உடன் இருந்தோம். இது சம்பந்தமாக சார்பு ஆய்வாளர், பெருநாழி காவல் ஆய்வாளர் ஆகியோர்கள் என்னை விசாரித்தார் நான் விபரம் சொன்னேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

ரைடு தொடர்பாக எங்களது இருசக்கர வாகனத்தில் சென்றோம் எனது முதல் விசாரணையில் எந்த வாகனத்தில் சென்றோம் என்றும் என்ன பொருள்கள் ரைடுக்கு எடுத்து சென்றோம் என்று குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் தனிநபர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் ஏதுவும் வாங்க வில்லை என்றால் சரிதான் .சார்பு ஆய்வாளருக்கு வந்த தகவலை உடனடி மேல் அதிகாரிக்கு அனுப்பி எந்த ஒப்புதலும் பெறவில்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதத்தில் அரசிதழ் பெற்ற அதிகாரிடமும் அ ல்லது நீதித்துறை நடுவர் முன்பாகவோ சோதனை செய்ய எதிரியாகிய உமக்கு உரிமையுள்ளது என்ற வாசகம் இடபெறவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் SHO முத்திரை ஏதுவும் வைக்கப்படவில்லை எனறால் சரிதான். அத்தாட்சியில் எதிரியின் கையொப்பம் ஏதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். மாதிரிகள் நீதித்துறை நடுவர் முன்புக்கு எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் ஏதுவும் நடைபெறவில்லை என்றும் நாங்கள் ரைடுக்கு சென்றதாக சொல்வது பொய் என்றும் எதிரியிடம் இருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும் எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் வீட்டில் இருந்த எதிரியை அழைத்துச் சென்று காவல் நிலையத்தில் வைத்து அனைத்து ஆவணங்களையும் தயார் செய்து எதிரியின் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.மேலதிகாரி கேட்டுக்கொண்டதற்கு இணங்க உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:-</u>**

இல்லை.

Taken down by me in open court
read over to the witness and
admitted by him to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.